தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**8 வயதுப்பிரிவு**
**(01.01.2018 – 31.12.2018 வரையில் பிறந்தோர்)**

## கேணல் அமுதா

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் போராளியாகி, லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியின் மகளிர் பிரிவுத் தளபதியாக உயர்ந்தவர் கேணல் அமுதா.

அழகிய மென்சிரிப்பு. குறைந்த பேச்சு. வேகமும் அறிவும் மிக்க செயற்திறன். போர்க்களங்களை வழிநடத்தும் மாண்பு. போராளிகளை வளர்ப்பதில் காட்டும் அக்கறை. இவையே இவரது அடையாளங்கள்.

இவர் மோட்டார் எறிகணைகளை இலக்குத் தவறாது ஏவும் திறன் கொண்டவர். குறுந்தூர, நெடுந்தூர மோட்டார்களை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் ஆளுமை மிக்கவர். போர்க்களத்தில் தன் கால் ஒன்றை இழந்தபோதும், லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியைக் களத்தில் நின்று வழிப்படுத்தியவர்.

தமிழீழத் தேசியத் தலைவரின் வழிகாட்டலை ஏற்று, தன் இறுதி மூச்சுவரை உறுதியோடு களமாடியவர். வீரம் செறிந்த ஆனந்தபுர மண்ணில் 2009 ஏப்ரல் நான்காம் நாள் கேணல் அமுதா வீரச்சாவைத் தழுவினார். இவரது இலட்சியமாம் தமிழீழத்தை மீட்போம்.

"தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்"